1995 மார்ச் 20]

கணக்கெடுப்பின் அடிப்படையிலேதான் சட்டமன்றத் தொகுதிகள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலே கூட 41 நாடாளுமன்றத் தொகுதிகள் இருந்தன. இன்றைக்கு மக்கள் எண்ணிக்கையிலே பார்க்கின்றபோது மேற்குவங்காளத்திற்கு கூடுதலாக போய் வேறுசில இடங்களுக்குக் கூடுதலாகப் போய் நமக்கு 41 என்பது 39 ஆக ஆகிவிட்டது. ஆகவேதான் இதைச் செய்கின்றபோது 1951–ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கையை வைத்துத்தான் இந்த எண்ணிக்கை நிர்ணயிக்கப்படவேண்டுமென்று ஒரு கருத்தைக்கூட நாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த நிலை ஏற்படாத வரையிலும் நாமாகவே எதையும் செய்வதற்கு இல்லை.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

62—

ஆரணியைத் தனிக்கோட்டமாக மாற்றுதல்

*22318—டாக்டர் **ஜெய்சன் ஜேக்கப்:***

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஆரணியைத் தனிக் கோட்டமாக மாற்றும் அரசின் திட்டம் எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணியை வருவாய்க் கோட்டமாக மாற்ற திட்டம் எதுவும் அரசின் குறிப்பில் இல்லை.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருவாய் கோட்டமாக மாற்றுகிற எண்ணம் அரசின் குறிப்பில் இல்லையென்று சொன்னார்கள். திருவண்ணாமலை–சம்புவராயர் மாவட்டத்திலே மொத்தம் 6 தாலுக்காக்கள் இருக்கின்றன. செய்யாறு தாலுகா, வந்தவாசி தாலுகா, ஆரணி தாலுகா, திருவண்ணாமலை தாலுகா, போளூர் தாலுகா, செங்கம் தாலுகா என்று 6 தாலுக்காக்கள் இருக்கின்றன. இந்த 6

தாலுக்காக்களில் செய்யாறு தாலுகா, வந்தவாசி தாலுகா, ஆரணி தாலுகா ஆகிய மூன்றும் செய்யாறு சப்-டிவிஷனிலும், திருவண்ணாமலை தாலுகா, போளூர் தாலுகா, செங்கம் தாலுகா ஆகிய 3-ம் திருவண்ணாமலை சப்-டிவிஷனிலும் தற்போது இருக்கின்றன. ஆனால் திருவண்ணாமலைக்கு அடுத்தப்படியாக அதிகமாக ரெவின்யூவை ஈட்டித்தருகிற தொகுதி ஆரணி என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, அரசு நிர்வாக வசதி கருதியும் மற்றும் பொதுமக்களுடைய வசதி கருதியும் ஆரணி தாலுகாவையும், போளூர் தாலுகாவையும் மற்றும் புதிதாக அமைய இருக்கிற பெரணமல்லூர் தாலுகாவையும் இணைத்து தனி உட்கோட்டமாக அறிவிக்க அமைச்சர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மேல்மட்டத்தைப் பிரிப்பதிலே கிடைக்கிற மக்களுக்கு கிடைக்கிற நன்மையை விட அடித்தளத்திலே இருப்பதை பிரிக்கிறபோது தான் அதிகமாக நன்மை கிடைக்கும் என்று கருதி வருவாய் உட் கோட்டம் இருக்கிறதே அதைத்தான், அதாவது ரெவின்யூ பிர்க்காவை தான் அதிகமாக பிரித்துக் கொண்டு வந்திருக்கிறது. அதற்குப் பிறகு வட்டத்தைப் பிரித்துக்கொண்டு வந்திருக்கிறோம். ஆகையால் இப்படி மக்களுடைய நலன் கருதி வேண்டுமென்றால் கீழ்மட்டத்தில் இருக்கிற அமைப்புகளை தேவைப்படுகிறபோது அரசு பிரிப்பதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக கூறியிருக்கிறார். அப்படி கூறியமைக்கு மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஆவன செய்வதாக அமைச்சர் சொல்லவில்லை. கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய, கிராம அளவில், பிர்க்கா அளவில் இருப்பதைப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருந்தாலும்கூட என்னுடைய இந்தக் கோரிக்கையை ஏற்று மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்றவாறு கீழ் நிலையிலுள்ள

1995 மார்ச் 20]

அமைப்புகளைப் பிரிக்கிறபொழுது, கீழ்நிலை அமைப்புகள் அதிகமாகிறபொழுது, மேல் அமைப்புகளை அப்படிப் பிரிக்க வேண்டுமென்ற தேவை ஏற்படுகிறபொழுது அரசு அதைப்பற்றிப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. சஞ்சய் ராமசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

விருதுநகர் பகுதியில் காலரா நோய் பரவுவதைத் தடுத்தல்

*35963—திரு. **சஞ்சய் ராமசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) காமராசர் மாவட்டம், விருதுநகர் நகரப் பகுதியில் அடிக்கடி காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதுவரை அங்கு காலரா நோயினால் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களின் குடும்பத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ): காமராசர் மாவட்டம், விருதுநகர் பகுதியில் காலரா நோய் பரவும் தகவல் தெரிந்த உடனேயே அனைத்து தடுப்பு நடவடிக்கைகளும், கட்டுப்பாடு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பொதுச் சுகாதாரத் துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. அங்கே காலராவால் யாரும் இறக்கவில்லை. ஆனால் குடல் அலர்ஜி நோயால் ஏப்ரல் 94–வரை 3 பேர் இறந்துள்ளார்கள். காலரா மற்றும் தொற்று நோயால் இறக்கக்கூடியவர்களுக்கு எந்த இழப்புத் தொகையும் கொடுக்கப்படுவதில்லை.

திரு. சஞ்சய் ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டபொழுது அங்கே, காமராசர் மாவட்டம், விருதுநகர் நகரத்தில் காலரா நோய் பரவிக்கொண்டு இருந்தது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்